
# விஞ்ஞானச் சிறகு

தமிழ்நாடு அறிவியல் இயக்க உறுப்பினர்களுக்கான அறிவியல் மாத இதழ்

VOLUME : 19 ISSUE:5 May- 2020 Rs. 3/-




## கோவிட் 19




பசிக்கு அரிசி வேண்டும், எத்தனால் தயாரிப்பதற்கு வேறு வழிகளும் இருக்கிறது...!

## அணுகுமுறையின் லட்சணங்கள்

அறிவியல் மக்களுக்கே

தனி இதழ் : ரூ.3/- ஆண்டுச் சந்தா: ரூ.30/-

# விஞ்ஞானச் சிறகு

**பதிப்பாளர்** : ஆர்.இராமகிருஷ்ணன்

**ஆசிரியர்** : பொ.இராஜமாணிக்கம்

**இணை ஆசிரியர்** : மொ.பாண்டியராஜன்

**ஆசிரியர் குழு**

முனைவர் ந. மணி
அ.அமலராஜன்
முனைவர் சு. தினகரன்
தி.சாந்தி
முனைவர் எஸ்.சேதுராமன்
சோ.மோகனா
எஸ்.பார்த்தசாரதி
தே.சுந்தர்

**இதழ் வடிவமைப்பு**
**சந்தா – நிர்வாகம் – விநியோகம்**
**இல.நாராயணசாமி**

***மாநில அலுவலகம்***

245, அவ்வை சண்முகம் சாலை.

கோபாலபுரம் சென்னை– 600 086

தொடர்பு எண் : 044 28113620







Owned by Tamil Nadu Science Forum and published by R.Ramakrishnan 6, Kakka Thoppu Street, Madurai - 625 001 and printed by G.Ramakrishnan at Vaigai Press & Publishers, 6/16, Bypass Road, Madurai - 625 018. Editor : **P.RAJAMANICKAM.**

# கோவிட் 19: கொரோனா வைரஸின் தோற்றம் சீனாவா... அதற்கு வெளியேவா? அதன் மரபணு வரிசை காட்டிக் கொடுத்து விடும்.

**பேரா.பி.இராஜமாணிக்கம்,**

பொதுச் செயலர், அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கொரோனா வைரஸை, சைனா வைரஸ் எனக் குறிப்பிட்டு அடிக்கடிப் பேசி வந்தார். இது ஒரு இனவெறி சார்ந்தது என்றும் சைனாவுக்கு எதிரான பிரச்சாரம் என்றும் பல நாடுகள் சொன்னாலும் அதை அவர் விடாமல் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

அதே போல் இங்கிலாந்து நாட்டுப் பிரதம மந்திரி போரிஸ் ஜான்சன் கொரோனா வைரஸ் பாதிப்பிற்காக சைனா 351 பில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங் இழப்பீடு தரவேண்டுமென எச்சரித்துள்ளார். அதற்கு மேலும் ஒரு படிபோய் அவ்வாறு தராவிட்டால் நீதிமன்றம் சென்று சைனாவின் சொத்துக்களை கைப்பற்றுவோம் எனவும் பெய்ஜங்கிற்குத் தரவேண்டிய கடனை திருப்பிச் செலுத்த மாட்டோம் எனவும் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் கோவிட்19 சைனா வைரஸ் என்றும், வூகான் வைரஸ் என்றும் அமெரிக்க ஜனாதிபதி அழைத்து சர்வதேச அரசியல் பண்ணி வரும் சூழலில் சைனா, வைரஸின் தோற்றத்தை தோண்டி எடுக்க ஆரம்பித்துள்ளது. இந்த ஆய்வின் விபரம் மிக விரைவில் பொது வெளிக்கு வர உள்ளது. கடந்த வாரம் மாஸ்கோவிற்கான தூதுவர் ஷாங் கன்குயி கோவிட்1 9யின் முழுக் கதையும் விரைவில் வெளிவர உள்ளது; அதில் உலகத்திற்கு நிறைய ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன என்கிறார்.


ஐந்து மிகச் சிறந்த அறிவியல் நிறுவனங்கள் நான்கு கண்டங்களின் பன்னிரெண்டு நாடுகளில் இருந்து கோவிட்19 வைரசின் 93 மரபணுத் தொகுதிகளை சர்வதேச தகவல் களஞ்சியத்தில் இருந்து சேகரித்து வைத்துள்ளனர்.

அந்த ஆய்வுகளின்படி கோவிட்19 வைரசின் மூதாதையர் வைரஸ் எம். வி1 என்றும் அது எச்13 எச்38 மரபணுத் தொகுதியாக பரிணாமம் அடைந்துள்ளது. இந்த இரண்டு மரபணுத் தொகுதி களும் அந்த தாயிடம் இருந்து உருவாகியுள்ளது.



இதன் பின்னர் எச் 13 எச் 38 மரபணுத் தொகுதி இரண்டாம் தலைமுறையில் எச்3 என்ற மரபணுத் தொகுதியாக மாறியுள்ளது. அந்த மரபணுத் தொகுதியே எச்1 ஆகப் பரிணமித்து கோவிட்19 நோய்க்கான சார்ஸ் கோ2 வாக மாறியுள்ளது. அதாவது கோவிட்19 பெற்றோர் எச்3 அதன் பாட்டனார் எச்13 & எச்38 அதன் முப்பாட்டனார் எம் வி1 ஆவர்.

எச்1 மரபணுத் தொகுதியைக் கொண்ட கோவிட் 19 நோயின் வைரஸ் வூகான் கடல் உணவு மார்க்கெட்டில் தோன்றியது



**என்றாலும் அதனுடைய பெற்றோர் எச்3 ஊகானில் கண்டுபிடித்தாலும் அந்த கடலுணவு மார்க்கெட்டில் கண்டறியப்படவில்லை... மிக முக்கியமாக கோவிட் 19 நோயின் பாட்டனார்கள் எச் 13 & எச்38 ஊகான் ஏரியாவிலேயே கண்டறியப் படவில்லை.**

**இதன் மூலம் தெரிந்து கொள்வது என்ன வென்றால் எச்1 வைரஸ் யாரோ ஒரு அதன் நோயாளி மூலம் கொண்டு வந்திருக்க வேண்டும். அதுவே தொற்று நோயை இங்கு உருவாக்கி இருக்கிறது. மரபணுத் தொகுதி பொய் சொல்லாது. கோவிட் 19 பரவியது எப்படி எனத் தேடிப் பார்த்தல் எது எந்தத் திசை நோக்கியும் செல்லும். இன்றைய நிலவரப்படி அது ஊகானில் தோன்றினாலும் அதன் உண்மையான தோற்றம் எங்கு என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது.**

இருப்பினும் இதன் தோற்றம் குறித்த குறியீடுகள் குறித்து சீனத்தூதுவர் ஷாங் குறிப்பிடுவது என்னவென்றால் :

ஹவாயில் ஒரு ஜப்பான் தம்பதிகளுக்கு கோவிட்19 தொற்று ஜனவரி 28 முதல் பிப் 3க்குள் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் சீனாவிற்கு வந்ததில்லை. மேலும் சைனாவில் வந்தவர்களோடு தொடர்பும் இல்லை. குறிப்பாக கணவனுக்கு பிப் 3 அன்று கோவிட்19 நோய் அறிகுறிகள் தோன்றியுள்ளன. கோவிட்19 நோய் ஜனவரி 1ல் வட இத்தாலியின் லம்பார்டி நகரில் வந்ததாக அங்குள்ள மீடியாக்கள் கூறின. இத்தாலியின் தலை சிறந்த மருத்துவர் கிஸ்ஸிப்பி ரெமுஸ்ஸி என்பார் சைனாவில் பரவுவதற்கு முன்னர் இத்தாயில் பரவ ஆரம்பித்து விட்டது என்கிறார்.

கடந்த குளிர்காலத்தில் 80000 மேல் ப்ளூ நோயில் அமெரிக்காவில் இறந்திருக்கின்றனர். இது கோவிட்19 நோயினால் ஏற்பட்டிருக்கும் என அமரிக்கன் வைரஸ் நிபுணரும் நோய்த்தடுப்பு கட்டுப்பாட்டு மையத்தின் இயக்குநருமான ராபர்ட் ரெட்பீல்டு ஊகித்துள்ளார். ஆனால் அமெரிக்கா அதனைச் சோதனை செய்யாமல் விட்டுவிட்டது. இதற்கு மேலாக இத்தாலியில் கோவிட்19 பரவ ஆரம்பித்ததும் அமெரிக்காவில் ப்ளூவால் பாதிக்கப் பட்டு இறந்தவர்களைப் பரிசோதிக்க விரும்பி அனுமதி கோரியதால் அமெரிக்கா அதை நிராகரித்து விட்டது.

இருப்பினும் தற்போதைய அறிவியல் தொழில் நுட்பம் கோவிட்19 தோற்றத்தையும் அதன் பாதையையும் தற்போது மறைந்தும் ஒளிந்தும் உள்ள உண்மைகள் நிச்சயமாகக் கண்டறிய முடியும் என்கிறார் சீனத் தூதுவர் ஷாங்.

ஷாங்கின் நேர்காணல் ரஷ்யா டாஸ்ஸில் வந்ததில் இருந்து சீனாவைக் கடுமையாகத் தாக்கி வந்த ட்ரம்ப் கடந்த மீடியா சந்திப்பில் வாயை அடக்கி வாசித்து இருக்கிறார். நீங்கள் சைனா மீது கோபமாக

இருக்கிறீர்களா எனக் கேட்டதற்கு "ஆம்" ஆனால் அது அரசினால் கட்டுப்படுத்த முடியாமல் போனதா அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்பதைப் பொறுத்தது எனறார். இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது. இருப்பினும் எங்களை நோய் எதிர்ப்பிற்காக முன்னமே அனுமதித்திருக்க வேண்டும். ஆனால் அதை அவர்கள் விரும்பவில்லை. எனவே அவர்கள் இதனால் வெட்கப்பட்டு நிற்கிறார்கள். இது தவறானதென்று அவர்களுக்குத் தெரியும் அதனால் அவர்கள் வெட்கி நிற்கிறார்கள். தற்போது ட்ரம்ப் சைனா மீது முழுமையாக குற்றம் சுமத்தவில்லை. சீனா மீதான குற்றத்தை அது முடித்து வைக்க வில்லை. இருப்பினும் அது பரிமாற்றத்திற்குரியது எனத் தெரிகிறது. இந்த ட்ரம்பின் பேச்சு என்பது சீனத் தூதுவர் ஷாங் நேர்காணல் வந்த பின் வெளிவந்துள்ளது.

சீனத் தூதுவர் கோவிட் 19ன் மூலவேரைத் தேடி அறிவியல் ரீதியாக நிரூபிப்போம் என கூறியிருக்கிறார். கோவிட்19 நோயின் வைரஸ் தாத்தா பாட்டி, பாட்டன், பூட்டி அமெரிக்காவின் தாயகமாக இருந்தால் ட்ரம்ப் மிகப் பெரும் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளப் போகிறார்....

அமெரிக்காவில் முதன் முதலாக 2020 பிப்29 அன்று முதல் கொரோனா சாவு நடைபெற்றது என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே இருவர் இறந்து போனது கொரானாவால் தான் என பல மாதங்களுக்கு பின்னர் தான் கண்டுபிடிக்கப் பட்டது

ஆனால் பிப் 6ல் சிலிகன் வேலியில் 57 வயதான பேட்ரீசியா தௌட் என்ற பெண் ஆடிட்டர் இறந்திருக்கிறார். அதற்கு ப்ளூ இல்லை யென்றார்கள்... கொரானாவும் இல்லையென்றார்கள். இதய நோயால் இறந்திருப்பார் என முடித்து வைத்தார்கள். ஆனால் அதன் பின்னர் திசுக்களின் பகுதிகளை எடுத்துச் சோதனை செய்த போது அது கொரோனா என நிரூபிக்கப்பட்டது. எனவே முதல் கொரானா சாவிற்கு முன்னரே கொரானா சாவும் அதன் தொற்றும் ஜனவரி மாதத்திற்குப் போய் நின்றது.

இறந்த பெண்மணி வெளிநாட்டிற்குச் செல்ல வில்லை. முதல் முதலாக அமெரிக்க அரசால் அறிவிக்கப்பட்ட சாவிற்கு முன்னர் இது நடந்திருக்கிறது. எனவே இது சமூகப் பரவலாக நடந்திருக்கிறது. மேலும் பிப்.17 அன்று சாந்தா கிளாராவில் நடந்த ஒரு சாவும் கொரோனாவே காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இந்த சாவுகள் பெரும் ஐஸ் பாறையின் மேல் பகுதி மட்டுந்தான் என்கின்றார் டாக்டர் சாரா கோடி. (www.nytimes.com Santa Clara County: First Known US Coronavirus Death Occurred on Feb. 6)

கோவிட்19 மூலம் எது என்று இன்றும் கண்டறியப்படவில்லை. அதன் மூலம் பல இடங்களுக்குச் செல்கிறது. அது எந்த இடத்தில் தோன்றியது என்பதைக் கண்டுபிடிப்பது அந்த நாட்டை காட்டிக் கொடுத்து அவமானப்படுத்து வதற்காக இல்லை. ஆனால் அதனுடைய பரிணாமத்தையும் அதனை முழுமையாகத் தோற்கடிப்பது தான் உண்மையான நோக்கம் என்கிறார். வூகானில் தான் முதன்முதலில் நாவல் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டாலும் அதன் மூலாதாரம் அங்குதான் உருவானது என ஆதாரங்கள் கிடையாது.

இன்றைய சூழலில் யாரும் பாதுகாப்பாக இல்லை. எனவே ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டு இருப்பதைவிட எல்லோரும் இணைந்து செயல்பட வேண்டும். இனவெறியும் பழைய "மறைமுக யுத்த" சிந்தனையும் தற்போதைய தொற்றுநோய்கு எந்த விதத் தீர்வும் தராது. ஆனால் உலகத்தை இருளில் நோக்கித் தள்ளும். இன்றைய உலகத் தொற்று நோய் சூழலில் நாடுகளுக்கு இடையில் எல்லைகள் இல்லை. ஒரே சமூகமாய் மாறியிருக்கிறோம். இந்த சமூகத்தின் முன் இருப்பது ஒரே இலக்கு தான்.

மூலம்: M.K. Bhadrakumar 22 Apr 2020 நியூஸ் கிளிக்.

https://www.newsclick.in/COVID-19-China-Wuhan-Coronavirus


**விஞ்ஞானச் சிறகு சந்தா செலுத்துவோர்**

கீழ்க்காணும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

ஆண்டுச் சந்தா ரூ.30 ஆயுள் சந்தா ரூ.300

வங்கிக் கணக்கு விபரம்

**TNSF-VIGNANA SIRAGU**

**Union Bank of India**

**Madurai main branch, Madurai**

**Saving Acc No: 335102010905298**

**IFSC Code : UBIN0533513**

# கொரோனா பற்றிய தவறான தகவல்களை களைய அறிவியல்பூர்வ செய்திகளை கொண்டுசெல்லுக..!

## தமிழக முதல்வருக்கு அறிவியல் இயக்கம் கடிதம்

மக்கள் மத்தியில் உலவும் கொரோனா பற்றிய தவறான மூடநம்பிக்கைகளை களைவதற்கு அரசு சாரா தொண்டு நிறுவனங்களையும், தன்னார்வ அமைப்புகளையும் சரியான முறையில் கண்டறிந்து, அறிவியல்பூர்வமான தகவல்களை கொண்டு செல்ல அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அறிவியல் இயக்கத்தின் சார்பில் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.சுப்ரமணி, முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கொரோனா பாதிப்பு ஏற்படத் தொடங்கிய நாளிலிருந்தே தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக கொரோனா பற்றிய விழிப்புணர்வு, அதனை ஒட்டி எழும் மூடநம்பிக்கைகள், வதந்திகள் மற்றும் பீதியை அகற்றுதல் ஆகிய பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம். உலகம் முழுவதும் இயங்கி வருகின்ற மக்கள் ஆரோக்கிய இயக்கத்தோடும் ஒத்திசைந்து பணியாற்றி வருகிறோம். இந்த நேரத்தில் கீழ் காணும் கோரிக்கைகளை தங்கள் உடனடி கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

மே 3 ஆம் தேதிக்கு மேல் ஒட்டு மொத்த ஊரடங்கை கைவிட வேண்டும். தொற்று இருக்கும் இடங்களை மட்டுமே தனிமைப்படுத்துதல் கண்காணிப்பை தீவிரப்படுத்துதல் அந்தப் பகுதியில் உள்ள அனைவரையும் பரிசோதித்தல் என்ற நிலைக்கு கொண்டு வர வேண்டும். இதர பகுதிகளில் பொருளாதார செயல்பாடுகள் தொடர வேண்டும். பொது விநியோகம் மூலம் விநியோகம் செய்யப்படுகிற பொருட்களை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டும். அனைத்து தனியார் மருத்துவ மனை களின் பயன்பாட்டையும் கொரோனா நோய்த்தொற்று கட்டுப்படுத்தும் காலம் வரை நேரடி அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும்.

மருத்துவமனைகளில் செவிலியர்கள், சுகாதார பணியாளர்கள் என கொரோனா நோய் தொற்று உள்ளவர்களை கையாளும் அனைவருக்கும் தற்காப்பு சாதனங்களை தரமானதாக, போதுமான அளவு வழங்க வேண்டும். மக்களோடும் மருத்துவர்களோடும் களப் பணியில் ஈடுபட்டிருக்கிற பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களுக்கும் போதுமான பாதுகாப்பு கவசங்களையும் உபகரணங்களையும் வழங்கி பாதுகாக்க வேண்டும்.

சாத்தியமான அனைத்தையும் தமிழ் நாட்டிலேயே போர்க்கால அடிப்படையில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒடிசா அரசு அறிவித்துள்ளது போல கொரோனா சேவையில் ஈடுபட்டு மரணம் அடைய நேரிடும் சமயத்தில் அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் பண முடிப்பு வழங்குதல் ,ஓய்வு பெறும் காலம் வரை முழு சம்பளம் ஓய்வூதியமாக வழங்குதல், குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், இறந்தவர்களின் உடல்களை முழு கண்ணியத்தோடு அடக்கம் செய்ய உத்தரவாதம் அளித்தல் ஆகியவை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

பெரும் பகுதி மக்கள் ஏழைகளாக உள்ள நாட்டில் அவர்களது குழந்தைகள் அனைவருக்கும் இணைய வழிக் கல்வி என்பது எல்லொருக்கும் சென்று சேராது. இணையம், கணினி வசதிகள் கிடைக்கப் பெறாத குழந்தைகள் இந்த வாய்ப்பை பயன்படுத்த இயலாது. இது மேலும் கற்றலில் ஏற்றத் தாழ்வு

களையே உருவாக்கும். எனவே இதுபற்றி ஓர் மதிப்பீடு இல்லாமல், திறனாய்வு இல்லாமல் அரசோ தனியார் கல்வி நிறுவனங்களோ இணைய வழிக் கல்வியை, தேர்வுகளை நிர்ப்பந்தம் செய்யக் கூடாது.

கிராமங்களிலும் நகரங்களிலும், அரசுப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழ்மை நிலையில் உள்ள வீட்டு பிள்ளைகளும் நல்ல வசதியான வீட்டுப் பிள்ளைகளும் என பல லட்சம் மாணவர்கள் பத்தாம் வகுப்பு தேர்வு எழுத உள்ளனர். இவர்கள் அனைவரின் வீட்டுச் சூழலும் ஒரே மாதிரியாக இருக்காது. ஊரடங்கு உத்தரவினால் வீட்டுக்கு ள்ளேயே முடக்கப்பட்டு இருக்கிற ஏழை தொழிலாளி குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு தேவையான வாழ்வாதாரம் இன்றி தவித்துக் கொண்டிருக்கிற சூழலில் அனைவருக்கும் ஒரே மாதிரியான பொதுத்தேர்வு என்பது எந்தவகையிலும் நியாயமானதாக இருக்காது.

கிராமங்களிலும் நகரங்களிலும், அரசுப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழ்மை நிலையில் உள்ள வீட்டு பிள்ளைகளும் நல்ல வசதியான வீட்டுப் பிள்ளைகளும் என பல லட்சம் மாணவர்கள் பத்தாம் வகுப்பு தேர்வு எழுத உள்ளனர். இவர்கள் அனைவரின் வீட்டுச் சூழலும் ஒரே மாதிரியாக இருக்காது. ஊரடங்கு உத்தரவினால் வீட்டுக்கு ள்ளேயே முடக்கப்பட்டு இருக்கிற ஏழை தொழிலாளி குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு தேவையான வாழ்வாதாரம் இன்றி தவித்துக் கொண்டிருக்கிற சூழலில் அனைவருக்கும் ஒரே மாதிரியான பொதுத்தேர்வு என்பது எந்தவகையிலும் நியாயமானதாக இருக்காது. ஏழைத் தொழிலாளர்கள் நிறைந்த ஊராட்சிகளில் தற்காலிக அம்மா உணவகங்களை திறந்து உணவு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மக்கள் மத்தியில் இன்னும் கொரோனா பற்றி தவறான மூடநம்பிக்கைகள் நிறைந்த செய்திகள் உலாவிக் கொண்டிருக்கின்றன. அவற்றை களைவதற்கு அரசு சாரா தொண்டு நிறுவனங்களையும், தன்னார்வ அமைப்புகளையும் சரியான முறையில் கண்டறிந்து கொரொனா பற்றிய அறிவியல் பூர்வமான தகவல்களை கொண்டு செல்ல வேண்டும். மேற்காணும் கோரிக்கைகளை உடனடியாக பரிசீலித்து நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்,

**எஸ்.சுப்ரமணி**

மாநில பொதுச்செயலாளர்,

தமிழ்நாடு அறிவியல் இயக்கம்.

## கவனமா இருங்க மக்களே...

**இந்தியர்கள் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளவர்கள்..**
**பிசிஜி மற்றும் தொழுநோய் தடுப்பு மருந்துகள்**
**கொரானாவைக் கட்டுப்படுத்தி விடும் ..**
**கொரானா எங்களிடம் வாலாட்ட முடியாதென்று**
**மெத்தனமாக இருந்து விட வேண்டாம்..**

ஆதாரமற்ற.. அறிவியலற்ற தகவல்களை நம்பாதீர்.. பரப்பாதீர்..

**தமிழ்நாடு அறிவியல் இயக்கம்**



# பேரிடர் மேலாண்மையில் மத்திய மாநில அரசுகளின் பொறுப்புகள் கடமைகள்.

**நா.மணி**

"எப்பொழுது வேண்டுமானாலும் என்னை மாநில முதல்வர்கள் தொடர்பு கொள்ளலாம்" இது பிரதமரின் அறிக்கை. எல்லா ஊடகங்களிலும் இது தலைப்புச் செய்தி ஆனது. எப்பொழுது வேண்டுமானாலும் அழைத்து பிரதமரிடம் மாநில முதல்வர்கள் என்ன கேட்பார்கள்? என்ன கேட்க முடியும்? அப்படி ஒருவருக்கு ஒருவர் பேசி முடித்துக் கொள்ளும் அளவு என்ன இருக்கிறது? அப்படி முடியும் எனில் மத்திய அமைச்சரவை இதர அரசியல் சாசனத்தின் நடைமுறைகள் எதற்கு? "இதுவரை 6 மாநிலங்களில் எங்களை ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். ஆனால் கேரளாவின் அனுபவங்கள் இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திற்கும் எளிதாக அப்படியே நடைமுறைப்படுத்த முடியாது" இந்த நுட்பமான செய்தி கேரள சுகாதாரத்துறை அமைச்சர் சைலஜா அவர்களின் பேட்டியில் இருக்கிறது. அமெரிக்க நாட்டின் புகழ்பெற்ற நாளிதழ் வாஷிங்டன் போஸ்டில் தெளிவாகி உள்ளது. ஆனால் இந்தியாவில் யாருடைய கவனத்தையும் இந்த வார்த்தைகள் பெற வில்லை.

கேரளம் மட்டுமல்ல. இந்திய ஒன்றியத்தின் ஒவ்வொரு மாநிலமும் தனித்துவமானது. கேரளாவை எடுத்துக் கொள்வோம். அது, கல்வி சுகாதாரம் என மனித வளர்ச்சி குறியீட்டில் மட்டும் முன்னேறிய மாநிலம் அல்ல. ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் சுற்றுலா



பயணிகள் வந்து செல்லும் மாநிலம். மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கினர் வெளிநாட்டில் வசிக்கின்றனர். தொற்று நோயை எதிர்கொள்வதில் கல்வி சுகாதாரம் வேலைவாய்ப்பு வருமானம் தொழில்கள் தொழில்முறை மக்கள்தொகை மக்கள் தொகை பரவல் வீட்டுவசதி இப்படி எல்லா காரணி களும் முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அளவிலான வேறுபாடுகள் கூட முக்கியமானவை. அவற்றுக்கும் கூட ஒரு முக்கிய பங்கு இருக்கிறது. அத்தோடு சுகாதாரம் மாநிலப் பட்டியலில் இருக்கிறது. எனவே கொரானா தொற்று நோயை கட்டுப்படுத்துவதில் மாநிலங்களுக்கு ஓர் தனித்துவ இயல்பும் பங்கும் இருக்கிறது. கொரானா தொற்று நோய் ஒரு தேசிய பேரிடர் என மத்திய அரசின் தேசிய பேரிடர் ஆணையம் அறிவித்துள்ளது. கொரானா தொற்று ஒரு தேசிய பேரிடராக மாறவும் பல்வேறு வகையில் மத்திய அரசே காரணம். 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் தேதி அன்று முதல் தொற்று கண்டறியப்பட்டது முதல் மார்ச் 18ஆம் தேதி வரையான காலகட்டத்தில், ஏற்பட்ட கவனக் குறைவுக்கு மத்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்.

கொரானா தொற்று ஒரு பேரிடராக மாறவும் மத்திய அரசே அடிப்படை காரணம். ஒரு நோய் தொற்று தேசிய பேரிடராக மாறக் காரணம் மத்திய அரசு தான் காரணம் எனில் அதனை மேலாண்மை செய்வதும் கட்டுப்படுத்து வதும் மத்திய அரசு செய்ய வேண்டியதே. அதன் கடமையும் பொறுப்பும் ஆகும். மார்ச் மாதம் 24ம் தேதியன்று தேசிய பேரிடர் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தது முதலே தெளிவற்ற பார்வை மத்திய அரசிடம் இருப்பதை அனைவரும் உணர முடியும். கொரானா ஒரு தேசிய பேரிடர் என்று அறிவித்த 72 மணி நேரம் கழித்தே இதில் பாதிக்கப்பட்டோருக்கான பொருளாதார நிவாரண உதவிகள் அறிவிக்கப்பட்டது. இந்த 72 மணி நேரத்தில்தான் நாடு முழுவதும் உள்ள



முறைசாரா தொழிலாளர்கள் புலம்பெயர்ந்தோர் நிச்சயமற்ற தன்மையை உணர்ந்து தங்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேறினர். கோடிக் கணக்கான தொழிலாளர்கள் திடீரென்று வேலையை இழந்தனர். உணவு, தண்ணீர் இன்றி கால்நடையாக பல நூறு கிலோ மீட்டர்கள் செல்ல தலைப்பட்டனர். தங்குமிடங்கள் இன்றி தவித்தனர். கூட்டம் கூட்டமாக வெளியேறினர். எந்த நோக்கத்திற்காக பேரிடர் மேலாண்மை சட்டம் அமலுக்கு வந்ததோ அதனையே கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் நிலைமை மோசமடைந்தது.

அத்தோடு, அந்த நிவாரணத் திட்டம் போதுமானதாகவும் இல்லை. இதனைக் கடைக் கோடியில் இருக்கும் மனிதனுக்கு கூட தெரிந்திருக்க முடியும். எனவே தான் அரசின் நிவாரண உதவிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். தொடக்க முதலே அரசின் தெளிவற்ற திட்டமிடல் தெரிந்தது. மத்திய அரசின் இந்த குளறுபடிகளுக்கு மாநில அரசுகள் பெரும் விலை கொடுக்க வேண்டி இருக்கிறது. "முறைசாரா தொழிலாளர்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அவரவர் இருக்கும் இடத்தில் இருங்கள். அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ரொக்க மானியம் உங்கள் வீடு அல்லது குடியிருக்கும் இடத்தை தேடி வரும். அவர்களை அங்கேயே தங்க வைக்க வேண்டியதும் உணவளிக்க வேண்டியது அந்தந்த நிறுவனங்களின் பொறுப்பு. அந்த நிறுவனத்திற்கு நிவாரண உதவிகளை ஈடுகட்ட வேண்டியது அரசின் பொறுப்பு." என்று அறிவித்திருந்தால் பெரும்பகுதி மக்கள் பட்டினியால் அல்லது உயிரிழக்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின்படி பேரிடர் அறிவிப்பு செய்யப்பட்ட பின்னர், மத்திய அரசின் பல்வேறு துறைகள்,மாநில அரசுகள் அவற்றின் பணிகளை ஒருங்கிணைக்க வேண்டியது பேரிடர் மேலாண்மை முகமை யின் அல்லது மத்திய அரசின் கடமையும் பொறுப்பும் ஆகும். இப்படி பேரிடரின் பணிகளை ஒருங்கிணைப்பது கண்காணிப்பது நிர்வகிப்பது அதற்கான திட்டங்களை மத்தியில் தீட்டுவது மாநிலங்களுக்கு உதவுவது அறிவியல் தொழில்நுட்ப உதவி செய்வது மனித வளம் மற்றும் இதர வளங்களை பயன்படுத்த உதவி செய்வது பயிற்சி அளிப்பது வரவிருக்கும் ஆபத்தை சுட்டிக் காட்டுவது இவை எல்லாவற்றுக்கும் மேலாக நிதி உதவி ஆகியவற்றை பேரிடர் மேலாண்மை முகமை அல்லது மத்திய அரசு செய்ய வேண்டும் என்பது அதன் விதிகளில் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவை பிறப்பிப்பது மட்டுமே தனது அடிப்படையான கடமையாக மத்திய அரசு கருதி இருப்பதாக தோன்றுகிறது.

என்றுமில்லாத ஒரு கொடிய நோய் பேரிடரை எதிர்கொள்ளும்போது ஒவ்வொரு மாநிலமும் பின்பற்றும் பரிசோதித்துப் பார்க்கும் முயற்சிகளை பாராட்டுதல், பகிர்ந்து கொள்ளுதல் இதில் ஒரு முக்கிய அங்கமாக இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் முன்னோடி மாநிலங்களின் முன் மாதிரி அனுபவங்களை மற்ற மாநிலங்கள் பயன் படுத்திக் கொள்ள இயலும். இதனை வெற்றிகரமாக கையாண்டு வரும் எந்த ஒரு மாநிலத்தையும் மத்திய அரசு பாராட்ட தயாராக இல்லை. இப்படி வெற்றிகரமாக கையாண்டு வரும் மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு, ஒரிசா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், தெலுங்கானா போன்ற அனைத்து மாநிலங்களும் மத்தியில் ஆட்சியில் செய்யும் கட்சி ஆளாத மாநிலங்கள். இதனாலோ என்னவோ இதுபற்றி மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை. பேரிடரை எதிர்கொள்ளும் நேரத்தில் கட்சி அரசியல் காரணமாக அதனை கண்டுகொள்ளாமல் இருப்பது முறையற்றது.

பேரிடர் மேலாண்மை சட்டத்தை அமலுக்கு கொண்டு வந்தால் மட்டுமே போதாது.பேரிடர் காலத்தில் தான், திட்டமிட்ட, திட்டமிடப்படாத, பயத்திலும், அச்சத்திலும், பீதியிலும், நம்பத்தகாத, அறிவியல் பூர்வமற்ற உண்மைக்கு விரோதமான பல்வேறு செய்திகள் உலா வரக் காரணமாகிறது. வீட்டிலேயே தங்கி இருந்தாலும் சமூக வலைதளங்கள் வாயிலாக பல தகவல்கள் வந்துசேரும். ஒவ்வொரு

நாளும் பேரிடர் பாதித்த நாட்டின் பிரதமர் ஊடகங்கள் வழியாக மக்களின் சந்தேகங்கள் கேள்விகள் தீர்த்து வைக்க வேண்டும். இதுவும் ஓர் அடிப்படை கடமை. உலகம் முழுவதும் முழுவதும் பாதிப்புக்குள்ளான பல்வேறு நாடுகளில் அந்த நாட்டின் அரசியல் தலைமை அன்றாடம் மக்களை ஊடகங்கள் வாயிலாக சந்தித்து பேசுகின்றனர். ஆனால் நம் நாட்டின் பிரதமர் வீடியோ பதிவுகளை அனுப்பி வைத்து விட்டு வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கிறார்.இது மக்களின் துயரை துடைக்கவும் நம்பிக்கை ஊட்டவும் போதுமானது அல்ல.

இது விஷயத்தில் நேரடிப் பொறுப்பு கடமை மத்திய அரசுக்கு உண்டு. எனவே நாள்தோறும் ஊடகங்களை சந்தித்து அன்றைய நிலை குறித்து மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். மாநில அரசுகள் தனித்துவமானவை என்றாலும் அதற்கு தேசிய பேரிடர் பணிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மட்டுமே உண்டு. நிதி, அறிவியல் தொழில் நுட்பம், பரிசோதனைக் கருவிகள் தற்காப்புச் சாதனங்கள் இவற்றின் இறக்குமதி பகிர்வு உற்பத்தி விநியோகம் ஆகியவை ஒன்றிய அரசின் கையில் தான் இருக்கிறது. இதனை எவ்வளவு தூரம் மத்திய அரசு செம்மையாக நிறைவேற்றி இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். இன்றைய நிலையில் மாநிலங்களின் நிலைமை எப்படி இருக்கிறது? மாநிலங்களில் பேரிடர் நிவாரண நிதி ஒன்றை மத்திய அரசு அறிவுறுத்தது. மொத்தமாக 11092 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இது பல்வேறு மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. சுமார் 1000 கோடி முதல் 20 கோடி வரை பகிர்ந்து அளிக்கப்பட்டது. மிகத் திறம்பட பணியாற்றி வரும் மாநிலங்களுக்கு மிகக் குறைந்த நிதி. இதற்கு என்ன அளவுகோல்? ஏன் இந்த பாரபட்சம்? அல்லது வேறுபாடு? மக்களுக்கு எடுத்து சொல்ல வேண்டியது அரசின் பொறுப்பு ஒன்றிய அரசின் கடமை.

ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி கரவான் இதழுக்கு கேரள நிதியமைச்சர் ஒரு பேட்டி அளித்தார். அதில் நாளது தேதி வரை மத்திய அரசு கொரானா நோய் தொற்று சிகிச்சை பேரிடர் நிதியாக ஒரு பைசா கூட வரவில்லை. ஜிஎஸ்டி இழப்பீடு நிதி இன்னும் வந்து சேரவில்லை. வரவு செலவு திட்டத்தில் ஆண்டு முழுவதுக்குமாக ஒதுக்கீடு நிதி செய்த நிதி மூன்றே மாதத்தில் கரைந்துவிட்டது. தேசிய சுகாதார முனையம் மற்றும் ஜிஎஸ்டி பாக்கி தொகைகள் ஆகியவையும் மத்திய அரசிடம் இருந்து வரவில்லை. இதர துறைகளுக்கு ஒதுக்கிய பணத்தை எடுத்து செலவழித்து வருகிறோம். மாநிலத்தின் வருவாய் 20 விழுக்காடு குறைந்திருக்கிறது. மதுபானம், லாட்டரி இவற்றின் வழியாக வரும் வருமானமும் நின்று போய்விட்டது. மாநில அரசின் கடன் வாங்கும் தன்மையை அதிகரிக்கவும் மத்திய அரசு அனுமதிக்க வில்லை. இதுபற்றி அனைத்து மாநில முதல்வர் களுக்கும் தான் ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும், ஏப்ரல் மூன்றாவது வாரத்தில் மாநில முதல்வர்கள் மற்றும் வல்லுனர்கள் கூட்டத்தை கூட்டி இரண்டு முழுநாள் விவாதிக்க இருப்பதாகவும் கூறியிருக் கிறார். இதன் அடிப்படையில் மத்திய அரசுக்கும் மக்களுக்கும் இந்த நிதி ஒதுக்கீட்டில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூற விரும்புவ தாகவும் அவர் கூறுகிறார். உச்ச நீதிமன்றத்தை அணுக உள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இது போன்று தானே மற்ற மாநிலங்களிலும் நிலைமை இருக்கும். ஆனால் அவர்களில் பலர் வெளிபடையாக பேசவில்லை.

சுருங்கக் கூறின், ஒரு தேசிய பேரிடர் மேலாண்மையில் ஒன்றிய அரசுக்கே பெரும் பொறுப்பு கடமை இருக்கிறது. அறிவியல் தொழில்நுட்பம் மருத்துவ சாதனங்கள் மருந்துகள் பொருளாதார உதவிகள் பொருளாதார நிவாரணம் நிதி ஆகிய அனைத்தும் ஒன்றிய அரசின் முழு பொறுப்பும் கடமையும் ஆகும் பேரிடர் மேலாண்மை சட்டத்தை மாநிலங்களில் நடைமுறைப்படுத்துவதில் உள்ளூர் நிர்வாகம் மனித வளம் ஆகியவற்றில் உதவி செய்வதாக மட்டுமே மாநில அரசுகளின் பொறுப்பும் கடமையும் இருக்கும். ஆனால் இப்போது மொத்த பொறுப்பும் கடமையும் மாநில அரசுகளின் பெரும் சுமையாக நெருங்குகிறது. ஒன்றிய அரசு தன் கடமையை பேரிடர்மேலாண்மை சட்டத்தின் படி சரிவரச் செய்யவில்லை. இது தவறு என்ற வலுவான குரல் மாநில அரசிடமிருந்து ஒலிக்கவில்லை என்பது வேதனையானது. கூட்டாட்சித் தத்துவம் குறைவின்றி வேலை செய்வதால் தான் உண்மையான ஜனநாயகத்தை நாம் அனுபவிக்கிறோம் என்று பொருள். நோய் பேரிடர் மேலாண்மையில் மருத்துவம் மட்டும் அறிவியல் பூர்வமாக இருந்தால் போதாது உன்னதமான கூட்டாட்சி அரசியலும் அறிவியல்பூர்வமாக செயல்பட வேண்டும்.

# கொரானா பாதிப்பு புனரமைப்பு

# சிறப்பு திட்டம் தேவை



கொரானா தொற்றினை பரவாமல் தடுக்க அரசு 40 நாட்களுக்கு ஊரடங்கு அமுல் படுத்தி உள்ளது. நகரம் கிராமம் என்றில்லாமல் எல்லா பகுதிகளிலும் மக்களின் வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது. சிதைந்து போய் உள்ளது. ஊரடங்கு காலத்தில் 40 நாட்களும் வருமானம் இல்லாதது மட்டுமல்ல, ஊரடங்கு முடிந்து இயல்பு வாழ்க்கை திரும்பினாலும், தொழிலாளர்கள், சிறு/குறு தொழில் செய்வோர், விவசாயிகள் வாழ்க்கையினை அதே புள்ளியிலிருந்து தொடர்வார்கள் எனச் சொல்ல முடியாது.

இவர்களின் வாழ்க்கை மீட்டெடுக்கப்பட மத்திய / மாநில அரசின் உதவிகள் மிக மிக அவசியம் .

அடுத்த வேலையினைத் தேடி கூலி/சம்பளம் கைக்கு வந்து சேரும் வரை அவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரம் தேவை. தவிர, ஊரடங்கு காலத்தில் நிச்சயமாக கடன் வாங்கித்தான் காலம் தள்ளியிருப்பார்கள். அது கந்து வட்டியாகத்தான் பெரும்பாலும் இருக்க முடியும்.

மற்றொரு புறம், சிறு /குறு தொழில் செய்பவர்கள் ,சிறு வியாபாரிகள் நிச்சயமாக பல் பின்னடைவுகளை அடைந்திருப்பார்கள். தொழில் நடத்துவதற்கும் குறைந்த முதலீடேனும் தேவை.

விவசாயிகளுக்கும் இதே நிலைமைதான். தங்களது பொருட்களை விற்றும் விற்காமலும் காலத்தை தள்ளி வந்துள்ளார்கள். தங்களது உற்பத்திகளுக்கு உரிய விலையை உத்திரவாதம் இல்லாத போது அவர்கள் வாழ்க்கை எப்படி நகர்ந்திருக்கும் என்பதனை உணர முடிகிறது.

பெண்கள், குறிப்பாக சுய உதவிக் குழுவில் இணைந்த பெண்களும் வருமானம் இல்லாததால் குழுவிற்கான தொகையினை திருப்பி செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். கடன் செலுத்தாத போது அடுத்தக் கடன் பெற இயலாது.

ஆக, கூலித் தொழிலாலார்கள், தொழில் செய்வோர்கள், விவசாயிகள் பெண்கள் யாராக இருந்தாலும் அடுத்த அடி எடுத்து வைக்க நிதி ஆதாரம் மிக அவசியமாக உள்ளது.

இதனை கவனத்தில் கொண்டே அரசுகள் நிவாரணத் திட்டங்கள் மற்றும் கடன் திட்டங்கள் உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

கூட்டுறவு வங்கிகளில் சிறப்பு நகைக் கடன் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது:

நகையின் மீது கடன் தரப்படும் : குறைந்தது ரூ 25000 அதிகபட்டசம் ரூ.100000. வட்டி 6%, கிராமிற்கு ரூ. 3300 வரை தரப்படும்.

கூட்டுறவு வங்கிகள் மூலம் செயல்படுத்தும் இந்த சிறப்பு கடன் திட்டத்தைனை சற்று பார்ப்போம்.

முதலில் இது நகைக் கடன் திட்டம். நகையே இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்?

நகை இருப்பவர்களுக்கும் இன்றைய நகையின் விலை நிலவரத்தில், ஏற்கனவே இருக்கும் திட்டத்தில் இருந்து ஒரு பெரிய சலுகைகள் இல்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு பதில் மக்களின் இயலாமைச் சூழலை பயன்படுத்தும் விதமாக உள்ளதோ எனத் தோன்றுகிறது.

மற்ற தேசியவுடமை வங்கிகளுக்கும் தனியார் வங்கிகளுக்கும் புதுத் திட்டம் எதுவும் அறிவிக்கவில்லை.

அரசுடமை வங்கிகளின் தேவையினை நாம் இப்போது உணரும் காலம்.

நகையினை அல்லாமல், பொறுப்புகள் இல்லாத (without mortgage) கடன்கள் வழங்க சிறப்புத் திட்டங்கள் உடனடியாக உருவாக்க வேண்டும். அதனை அனைத்து வங்கிகளும் எந்த இடர்பாடுகளும் இல்லாமல் வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். திருப்பிச் செலுத்தும் காலம் நீண்ட காலமானதாகவும் வட்டியில்லாமலும் அல்லது மிகக்



குறைந்த வட்டியிலும் இருக்க வேண்டும்.

இதனை ஊரடங்கு அமுலில் இருக்கும் போதே துவக்க வேண்டும். அப்போதுதான், ஊரடங்கு முடிந்த உடன் தொழில் துவக்க ஏதுவாக இருக்கும்.

ஏற்கனவே வாங்கி யுள்ள கடனை கருத்தில் கொள்ளாமல் புதியக் கடன் வழங்க வேண்டும். மகளிர் குழுவினருக்கு ஏற்கனவே வாங்கி உள்ளகடனுக்கு மூன்று மாதத் தவணை அவகாசம் கொடுத்துள்ளதால் புதிய கடனை இதனைச் சாராமல் தரவேண்டும்.

விவசாயிகளுக்கு உர மானியத்திலும் வெட்டு விழுந்துள்ள நிலையில் அவர்களின் விவசாய செயல்பாடுகள் தீவிரம் கொள்ள அவசியம் சிறப்பு திட்டம் அவசியம்.

ஜூன் மாதத்தில் தென் மேற்கு பருவ மழைத் துவங்க உள்ள நிலையில் மே மாதத்தில் ஒரு கோடை பெய்தாலும் விவசாயிகள் வேகப்பட்டு விடுவார்கள். சிறப்பு த்திட்டம் அவர்களுக்கு நம்பிக்கைத் தரவேண்டும்.

மக்களிடம் பணம் இல்லை. புழக்கத்தில் பணம் இல்லை. பொருளாதார ரீதியாக மக்களிடம் வாங்கும் சக்தி இல்லை. இது தொழில் வளர்ச்சிக்கான சூழலாக அமையாது.

கடன் திட்ட்த்துடன் அரசும் தனது செலவினங்களை அதிகரித்தால்தான் ( யீரடெடைஉ நஓயீநனேவைரசந ) மக்களின் வாங்கும் சக்தி மேலும் அதிகரிக்கும். மக்கள் நல திட்டங்கள் உடனுக்குடன் அமுல்படுத்த வேண்டும்.

மத்திய அரசும் மாநில அரசும் இதற்கான செயல் திட்டத்தினை வடிவமைத்து திறம்பட செயல்படுத்த வேண்டும்.

**கு.செந்தமிழ் செல்வன்**

# அரிசியிலிருந்து கைகழுவுவதற்கான எத்தனால்: சாப்பிட அரிசி தேவைப்படுபவர்கள் இனிமேல் கேக் சாப்பிட்டுக் கொள்ளட்டும்!



**ஆங்கிலத்தில் டி.ரகுநந்தன், நியூஸ் கிளிக் இணைய இதழ், 2020 ஏப்ரல் 24**

**தமிழில் : முனைவர் தா.சந்திரகுரு**



தங்களுக்கு ரொட்டி இல்லை என்று விவசாயிகள் புகார் கூறுவதாக 17 அல்லது 18 ஆம் நூற்றாண்டில், பிரெஞ்சு இளவரசி ஒருவரிடம் கூறப்பட்டது. அதற்கு பதிலளிக்கும் வகையில் அந்த இளவரசி 'அப்படியானால், அவர்கள் கேக் சாப்பிடட்டும்!' என்ற புகழ்பெற்ற சொற்றொடரை உச்சரித்ததாகக் கூறப்படுவதுண்டு. அப்போதைய பிரெஞ்சு பிரபுத்துவம் விவசாயிகளைப் புறக்கணித்ததையும், விவசாயிகளின் நிலை பற்றிய புரிதல் எதுவும் இல்லாமல் இருந்ததையும் எடுத்துக்காட்டுவதற்காக அந்த சொற்றொடர் பயன்பாட்டிற்கு வந்தது.

அதேபோன்ற கொடூரமான, மனிதாபிமானமற்ற அணுகுமுறையை, சானிடைசர்கள் (சுத்திகரிப்பு திரவம்) உற்பத்திக்காகப் பயன்படுத்துவதற்கும், பெட்ரோலில் உயிரி–எரிபொருளாகச் சேர்க்கப்படு வதற்கும் என்று கணிசமான அளவு சேமிப்பில் உள்ள அரிசி கையிருப்பை எத்தனால் ஆக மாற்றுவது என்று இந்திய அரசாங்கம் சமீபத்தில் எடுத்திருக்கும் முடிவு இப்போது காட்டுகின்றது.

போதுமான தங்குமிடம், அடிப்படைத் தேவை களுக்கான பணம், கோவிட்–19 நோயிலிருந்து பாதுகாப்பு போன்ற அனைத்தையும் இழந்து நிற்கின்ற, லட்சக்கணக்கில் புலம்பெயர்ந்து, அன்றாட ஊதியம் பெறுகின்ற அமைப்புசாராத் தொழிலாளர் கள், சுயதொழில் புரியும் தொழிலாளர்கள், தங்களுடைய குறைந்தபட்ச வாழ்வாதாரத்திற்குத் தேவையான உணவில்கூட பற்றாக்குறையை தினமும் எதிர்கொள்கின்ற ஏழைகள் ஆகியோரின் முகத்தில் முரட்டுத்தனமாக ஓங்கி அறைகின்ற வகையில் அரசாங்கம் இந்த முடிவிற்கு வந்துள்ளது.

தங்களுடைய உயிரைப் பிடித்து வைத்துக் கொள்வதற்காக, வழங்கப்படும் உணவிற்காக கையேந்தி, ஆங்காங்கே உள்ளூர் தன்னார்வ நிறுவனங்களால் எடுக்கப்படுகின்ற முயற்சிகளை மட்டுமே நம்பி உதவியற்ற ஏழைகள் நாதியற்று, தெருக்களில் நிற்பதாக ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் வருகின்ற செய்திகளால், உணவு தானியங் களை இந்த பிரிவினருக்கு விநியோகித்து வருவதாக மத்திய அரசு வெளியிட்டு வருகின்ற அறிக்கைகளை பொய் என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. பல மாநில அரசாங்கங்களும் ஒழுங்கமைக்கப்பட்ட உணவு விநியோகம் மற்றும் ஆதரவு அமைப்புகளை நிறுவுவதில் தோல்வியையே கண்டிருக்கின்றன. மத்திய அரசின் நிதி உதவி இல்லாததாலும், ஊரடங்கு காரணமாக ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பின் காரணமாகவும் அனைத்து மாநிலங்களும் போராடிக் கொண்டிருக்கின்றன.

மக்கள் பட்டினி கிடக்கும் போது அரசாங்கம் சுமார் 6 கோடி டன் உணவு தானியங்களைக் கையிருப்பில் வைத்திருக்கிறது. அந்த இருப்பில் சுமார் 3.1 கோடி டன் அரிசியாகவும், 2.75 கோடி டன் கோதுமை யாகவும் உள்ளது. கையிருப்பில் வைத்திருக்கும் உணவு தானியங்களை கணிசமான அளவில், ரேஷன் கார்டு அல்லது வேறு எந்தவொரு ஆவணமும் இல்லாமல், நேரடியாக பொது விநியோக முறை மூலமோ அல்லது மாநில அரசுகள் மூலமாகவோ விநியோகிக்க வேண்டும் என்று பல வல்லுநர்களும், சிவில் சமூக அமைப்புகளும், தொழிலாளர் சங்கங்களும் மத்திய அரசிடம் பலமுறை கெஞ்சி கேட்டுக் கொண்டிருக்கின்றன. நாடு முழுவதும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பிற ஏழைகளுக்கான தங்குமிடங்களில் இந்த தானியங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரி வருகின்றனர். அனைவருக்கும் இவ்வாறு தானியங்கள் வழங்கப்பட்ட பிறகும், குறைந்தபட்சம் இருப்பு வைத்திருக்க வேண்டிய அளவைப் பூர்த்தி செய்யப் போதுமான அளவிற்கு, 2.1 கோடி டன் உணவு தானியங்கள் அரசாங்கத்திடம் மீதம் இருக்கும் அளவிலேயே இந்த கையிருப்பு இருக்கிறது.

ஆனாலும் மத்திய அரசிடம் வைக்கப்பட்டிருக்கும் இந்த வேண்டுகோள் செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கு போன்றாகி விட்டது. அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டால், அது அவசர காலங்களுக் கென்று சேகரித்து வைக்கப்பட்டுள்ள கையிருப்பு அளவைக் குறைத்து விடும் என்று மத்திய உணவு

மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் கூறியுள்ளார். இதைவிடப் பெரிய அவசரநிலை என்று ஏதாவது இருக்க முடியுமா?

2018ஆம் ஆண்டு தேசிய உயிரி–எரிபொருள் கொள்கையில் பொருத்தமான விதிகளைச் சேர்த்து, ஏழைகளுக்கான வெளிப்படையான தேவைகளைப் புறக்கணித்து விட்டு, எத்தனாலைத் தயாரித்து அதனை உயிரி–எரிபொருளாக மாற்றுவது மற்றும் சானிடைசர்களைத் தயாரிப்பது போன்ற செயல்பாடு களுக்காக, சேகரித்து வைக்கப்பட்டுள்ள கையிருப்பைப் பயன்படுத்துவதற்கான அவசரத் தேவை எழுந்திருக்கிறது என்ற முடிவிற்கு அரசாங்கம் இப்போது வந்திருக்கிறது, உண்மையிலேயே அவ்வாறான தேவை எதுவும் இருக்கிறதா?

சானிடைசர்களுக்கும் போதுமான எத்தனால் உயிரி–எத்தனால் தயாரிப்பதில் வரலாற்று ரீதியாக இந்தியா பெரும் சிக்கல்களை இதுவரையிலும் சந்தித்துள்ளது என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். பெரும்பாலும் கரும்பின் அடிப்படையில் இயங்கி வருகின்ற சர்க்கரைத் தொழிலில் துணை உற்பத்திப் பொருளாகப் பெறப்படுகின்ற வெல்லப்பாகுகளிலிருந்து. இந்தியா ஆண்டுதோறும் சுமார் 250–300 கோடி லிட்டர் எத்தனாலை உற்பத்தி செய்து வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படுகின்ற எத்தனால், பொதுவாக மதுபானத் தொழில் மற்றும் ரசாயனத் தொழில்களில் ஏறக்குறைய சம விகிதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பெரும்பாலும் உபரி எத்தனால் கிடைக்காத காரணத்தால், முதன்முதலாக நிர்ணயிக்கப் பட்டிருந்த 5% எத்தனால் கலந்த பெட்ரோல் (EBP) என்ற இலக்கைகூட இந்தியாவால் அடைய முடியவில்லை எனும் போது, பெட்ரோல் அளவில் 20% என்ற அளவிற்கு அருகில் சென்று எப்படி இலக்கை அடைவது? எத்தனாலை பெரும்பாலும் பிரேசிலிட மிருந்து இந்தியா இறக்குமதி செய்து வருகிறது. உண்மையாகவே எத்தனால் இப்போது தேவைப் படுகின்றது என்றால், எப்போதும் போல் அதை இறக்குமதி செய்து கொள்ளலாம்.

ஊரடங்கின் கீழ், அனைத்து மதுபான வடிசாலை களும், சில்லறை விற்பனை நிலையங்களும் முற்றிலும் மூடப்பட்டிருப்பதால், மதுபானத் தொழிலிலும் எத்தனால் இப்போது பயன்படுத்தப்படுவதில்லை. அரசாங்கம் சில வடிசாலைகளை சானிடைசர்களைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. ஊரடங்கு விதிகளின் கீழ் கிட்டத்தட்ட அனைத்து ரசாயனத் தொழில்களும் மூடப்பட்டு கிடக்கின்றன. இதன் விளைவாக, அருந்தக் கூடிய மறும் அருந்தவியலாத ஆல்கஹால் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் அதிக அளவில் எத்தனால் இருப்பில் உள்ளது இந்த தொழிற்சாலைகள் தங்களுடைய முழு அளவிலான செயற்பாடுகளை மீண்டும் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இன்னும் பல மாதங்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இன்றைய நிலையில் சானிடைசர்களை உற்பத்தி செய்வதற்கு, சுமார் 50 கோடி லிட்டர் எத்தனால் கிடைக்கும், மேலும் 2020 அக்டோபர் முதல் தொடங்கவிருக்கும் அடுத்த கரும்பு பிழியும் பருவத்திலிருந்து புதிய எத்தனாலும் கிடைக்கும் என்று மிகச் சாதாரண மதிப்பீடுகளே தெரிவிக் கின்றன. இந்த இருப்பைப் பயன்படுத்தி வேண்டும் அளவிற்கு சானிடைசர்களைத் தயாரித்துக் கொள்ள முடியும்! அப்படியிருக்கின்ற நிலையில், எத்தனால் தயாரிக்கும் நோக்கத்திற்காக விலைமதிப்பற்ற அரிசியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் உண்மையிலேயே இருக்கிறதா?

## உயிரி–எரிபொருள் கொள்கை

உயிரி–எரிபொருள் கொள்கை 'உணவு அல்லாத பொருட்களை' மட்டுமே பயன்படுத்த முன்னதாக அனுமதி அளித்திருந்தாலும், அந்தக் கொள்கையில், 2018ஆம் ஆண்டு புதிய விதிமுறை அறிமுகப்படுத்தப் பட்டது. உணவு தானியங்கள் 'உபரியாக இருக்கும் கட்டத்தில்' (பத்தி 5.2) அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள அந்த புதிய விதிமுறை அனுமதி அளிக்கிறது. வேளாண் பயிர் ஆண்டில் வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் எதிர்பார்ப்பை விட உணவு தானியங்கள் கூடுதலாக இருக்கும் என்று கணிக்கப்படும் போது, தேசிய உயிரி–எரிபொருள் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில், அந்த உபரி அளவு உணவு தானியங்களை எத்தனாலாக மாற்றிக் கொள்ள கொள்கை அனுமதிக்கும்' என்று பத்தி 5.3 கூறுகிறது.

இன்று எழுகின்ற கேள்வி என்னவென்றால், வேளாண் அமைச்சகம் 2020ஆம் ஆண்டை 'உணவு

தானியங்கள் கூடுதலாக இருக்கும் என்று கணித்த ஆண்டாக அறிவித்துள்ளதா? அறுவடை, தொடர்புடைய போக்குவரத்து மற்றும் பிற ஏற்பாடுகள் என்று அனைத்தும் மிகமோசமாகப் பாதிக்கப் பட்டுள்ள நிலையில், பயிர் உற்பத்தி அல்லது சாகுபடிக்கு உட்பட்ட பகுதி எவ்வளவு குறைந்து இருந்தாலும் உணவு தானியங்கள் உற்பத்தி மட்டும் அதிகரிக்குமா? நிச்சயமாக, உயிரி–எத்தனால் தயாரிக்க அரிசி கையிருப்பைப் பயன்படுத்துவது போன்ற முக்கியமான முடிவு எடுக்கப்பட்டிருப்பது, இதுவே முதல் தடவையாகும். எப்படியாவது, எந்த விலை கொடுத்தாவது எத்தனாலை உற்பத்தி செய்வதில் மட்டுமே ஆர்வம் கொண்டுள்ள உயிரி–எரிபொருள் குழுவை மட்டும் கருத்தில் கொண்டிராமல், அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு முடிவு எடுத்திட வேண்டிய மத்திய அமைச்சரவை, மோசமான தொற்றுநோய் மற்றும் ஊரடங்கு நடவடிக்கைகளுக்கு மத்தியில் கோடிக்கணக்கானவர்கள் ஆபத்தான நிலையில் இருக்கிற நிலையில், இத்தகைய முடிவை எடுத்திருக்கிறது.


நாட்டின் வரலாற்றிலே முக்கியமான இந்த நேரத்தில், இந்தப் பிரச்சினை சட்டப்பூர்வமானது என்பதாக இல்லாமல், நெறிமுறை சார்ந்ததாக இருக்கிறது. நாட்டு மக்களுக்கு உணவு தேவைப் படுகின்றது. பசியுடன் மக்கள் அதிகம் இருக்கின்ற நிலையில், அவர்களுக்குத் தேவையான உணவை எத்தனாலாக மாற்றுவது கடுமையான, மோசமான முற்றிலும் மனச்சாட்சியற்ற முடிவாகும். ஒருவேளை இந்திய மக்களுக்கு அரிசி தேவையில்லை என்று அரசாங்கம் நினைத்தால், குறைந்தபட்சம் அரிசி தேவைப்படுகின்ற பகுதிகளுக்கு, இந்தியாவின் அருகே இருக்கின்ற நாடுகள் உட்பட உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான அகதிகளுக்கு அதை ஏற்றுமதி செய்யட்டும். இந்தியாவுக்கு தற்போது தேவைப்படாத அரிசி கையிருப்பை உயிரி–எரிபொருளாக மாற்றுவது அல்லது தயாரிப்பதற்கான வேறு மாற்றுப் பொருட்கள் இருக்கின்ற சானிடைசர் களாக மாற்றுவது என்பது உண்மையில் நெறிமுறையற்ற குற்றமாகும்.

மூலம் https://www.newsclick.in/Ethanol-from-Rice-Let-Them-Eat-cake

(சுருக்கப்பட்ட வடிவம் )

# வரலாற்றில் கொள்ளைநோய்கள்

**சிதம்பரம் இரவிச்சந்திரன்**



உலகம் முழுவதும் பரவும்நோய்களே கொள்ளை நோய்கள் (pandemic diseases) என்று அழைக்கப் படுகின்றன. மனிதவரலாற்றில், கொள்ளைநோய்கள் காலம்காலமாக தோன்றிவருகின்றன. 20ம் நூற்றாண்டிலும் சில கொள்ளைநோய்கள் தோன்றின. 1918ல் ஏற்பட்ட ஸ்பானிஷ் ஃப்ளூ (Spanish flue) இவற்றில் மிக மோசமானது. இதனால், 15 மில்லியன் பேர் உயிரிழந்தனர். இந்நோய் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட நாடுகளில் ஸ்பெயினும் ஒன்று.

ஸ்பெயின் தொடக்கத்தில் இந்நோயைக் கட்டுப் படுத்தத் தீவிரமாக முயற்சி செய்யவில்லை. நோயின் தாக்கம் பற்றிய செய்திகளை ஆரம்பத்தில் எந்தத் தணிக்கையும் செய்யாமல் அந்நாடு வெளியிட்டது. மற்ற நாடுகளைப் போல நோயின் பரவலைத் தடுக்க ஸ்பெயின் அப்போது கட்டுப்பாடுகள் எதையும் நடைமுறைப்படுத்தவில்லை. அதனால், இந்த நோய் ஸ்பெயினில் மட்டுமே தோன்றக்கூடியது என்று தவறாகக் கருதப்பட்டது. அதனால், இந்நோய்க்கு ஸ்பானிஷ் ஃப்ளூ என்ற பெயர் ஏற்பட்டது.

இந்நோய் ஏ வகையைச் சேர்ந்த இன்ஃப்ளூயன்சா ஹெச்1என்1 (H1N1) என்ற வைரஸ் கிருமியால் ஏற்பட்டது. இதைத் தடுக்க தடுப்பூசிகள், பாக்டீரியா எதிர்மருந்துகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. தனித்திருத்தல் (isolation) தனிமைப்படுத்துதல் (quarantine), தனிமனித நலப் பழக்கவழக்கங்கள், கிருமிநாசினிகளின் பயன்பாடு, மக்கள் ஒன்று கூடுவதைக் கட்டுப்படுத்துதல் போன்ற மருத்துவம்



இல்லாமுறைகளின் மூலம் (non pharmaceutical interventions), இந்நோய்க் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 1919 கோடையில் இந்நோய் முடிவிற்கு வந்தது.

1957 பிப்ரவரியில் ஆசியப் புளூ (Asian flue) சீனாவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. விரைவில் இது உலகம் முழுவதும் பரவியது. இந்நோய் இன்புளுயன்சா ஏ துணைப்பிரிவைச் சேர்ந்த ஹெச்2என்2 (H2N2) வைரஸால் பரவும் ஒரு நோய். ஏஸியன் புளூ வைரஸ் (Asian flue virus) என்றும் அழைக்கப்படும் இது 1957 ஜூனில் அமெரிக்கா விற்குப் பரவி, அங்கு70,000 மரணங்களை ஏற்படுத்தியது. உலகம் முழுதும் 1 முதல் 2 மில்லியன் பேர் இநோயால் உயிரிழந்தனர்.

இந்த வைரஸிற்கு எதிரானத் தடுப்பூசி மருந்துகள் மற்றும் இரண்டாம்நிலைத் தொற்றைத் தடுக்கும் பாக்டீரியா எதிர்மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டது இதன் பரவலைத் தடுத்து நிறுத்தியது. உலகை அச்சுறுத்திய மற்றொரு கொள்ளைநோய் ஹாங்காங் புளூ. ஜூலை 1968ல் சீனாவில் தோன்றிய இது 1969, 1970 வரை நீண்டது. இந்நோய் இன்புளுயன்ஸா ஏ துணைப்பிரிவைச் சேர்ந்த ஹெச்3என்2 (H3N2) என்ற வைரஸால் பரவியது. இதைத் தடுக்க மருந்து ஒன்று கண்டுபிடிக்கப் பட்டாலும், பல நாடுகளுக்கும் இந்நோய்த்தொற்றுப் பரவியதற்குப் பிறகே அது செயல்பாட்டிற்கு வந்தது.

ஹாங்காங் புளூ 1 முதல் 4 மில்லியன் மக்களின் உயிரைக் குடித்தது. 65 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதினரையே இந்நோய் தாக்கியது. ஹெச்.ஐ.வி (HIV) என்பது மனித நோய் எதிர்ப்பாற்றலை அழிக்கும் ஒரு வைரஸ். மேற்கு ஆப்பிரிக்காவில் வாழும் ஒரு வகை சிம்பன்சிகளிடம் இருந்தே இத்தொற்று மனிதர்களுக்குப் பரவியதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இது 1970 களிலேயே அமெரிக்காவில் பரவத் தொடங்கியது என்றாலும்,1980களின் ஆரம்பகாலம் வரை இந்நோய் மக்களின் கவனத்தைக் கவரவில்லை.

இந்நோய் கண்டவர்கள்இரண்டாம்நிலைத் தொற்று மற்றும் புற்றுநோயால் உயிரிழந்தனர். 1970கள் முதல் 75 மில்லியன் மக்கள் இத்தொற்றினால் பாதிக்கப்பட்டனர். இவர்களில், 32 மில்லியன் பேர் மரணம் அடைந்தனர். எய்ட்ஸ் (AIDS) ஹெச்.ஐ.வித் தொற்றின் இறுதிக்கட்டம். தற்போது, ஹெச்.சி.வி கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக மாறியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் நோயுடன் நீண்டநாள் ஆரோக்கியமாக வாழ ஆரம்பித்தனர்.

சார்ஸ் (Severe Aquatic Respiratory Syndrom SARS) எனப்படும் தீவிர மூச்சுத் திணறல் தொற்று நவம்பர் 2012ல் சீனாவில் தோன்றியது. இது சார்ஸ் கொரோனா வைரஸ் அல்லது சார்ஸ் சி.ஓ.வி (SARS CoV) என்ற வைரஸால் ஏற்பட்டது. கடுமையானக் காய்ச்சல், தலைவலி, உடல் வலி இவற்றுடன் தொடங்கி வறட்டு இருமலை ஏற்படுத்தும் தொற்று இது. இருமல் பின் மூச்சு விடுவதில் சிரமங்களை ஏற்படுத்தியது. உலகச் சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரங்களின்படி, இந்நோய்த்தொற்றால் உலகில் 8096 பேர் பாதிக்கப் பட்டனர்.

இவர்களில் 774 பேர் உயிரிழந்தனர். இந்த வைரசிற்கு எதிராக எந்த மருந்தும் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. நோயாளிகளின் உடல்நிலையை மேம்படுத்துவதே சிகிச்சைமுறையாகக் கொள்ளப் பட்டது. சார்ஸ் நோயாளிக்கு, தனிமை மையத்தில் அல்லது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டநிலையில் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஹெச்1என்1 (H1N1) புளூ 21ம் நூற்றாண்டில் ஏற்பட்ட முதல் கொள்ளைநோய். 1009ல் தோன்றிய

இது ஸ்வைன் புளூ என்றும் அழைக்கப்பட்டது. இக்கிருமி விரைவில் உலகம் முழுவதும் பரவியது.

முதல்முதலில் இந்த வைரஸ் ஏப்ரல் 2009ல் அமெரிக்காவில் கண்டறியப்பட்டது. இதன் மரபணு வரிசை (gene segments) பன்றிகளில் காணப்படும் மரபணு வரிசையுடன் ஒத்திருந்ததால், இது ஸ்வைன் புளூ என்ரு அழைக்கப்பட்டது. பன்றிக் காய்ச்சல் என்றும் அழைக்கப்பட்ட இத்தொற்றிற்கு விஞ்ஞானிகள் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தனர். இப்போது இந்நோய் வராமல் தடுக்க வைரஸ் எதிர்ப்பு மருந்துகளும் தடுப்பூசிமருந்துகளும் உள்ளன.

மெர்ஸ் (MERS Middle East AquaticRespiratory Syndrom) ஜூன் 2019ல் முதலில் சௌதி அரேபியாவில் தோன்றியது. விரைவில் இது 27 உலக நாடுகளுக்குப் பரவியது. இது மெர்ஸ் சிஓவி (MERS CoV) என்ற வைரஸால் ஏற்படுகிறது. நுரையீரலைத் தாக்கும் இந்த வைரஸிற்கு எதிராக இப்போது மருந்துகள் எவையும் இல்லை. இதற்கு எதிரான மருந்துகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் உலகம் முழுவதும் நடக்கிறது. 2014–2016 காலகட்டத்தில் மேற்கு ஆப்பிரிக்காவில் தோன்றிய எபோலா வைரஸ் நோய் உலகம் எங்கும் தீவிரமாகப் பரவியது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்ட எண்ணிக்கையை விட மிக அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந்நோயைப் பரப்பியது சைன் எபோலா வைரஸ் என்ற பிரிவைச் சேர்ந்த இபிஓபி என்ற வைரஸ். தர்போது, இதைக் கட்டுப்படுத்த உரிமம் பெற்ற எந்த தடுப்பூசிமருந்தும் இல்லை. இவை தவிர, 2010–2018 ஆண்டுகளுக்கு இடைப் பட்ட காலத்தில், இந்தியாவில் கர்நாடகாவில் தோன்றிய குரங்குக் காய்ச்சல், 2018ல் கேரளாவைப் பாதித்த நிப்பா வைரஸ் போன்றவையும் வேரு சில நோய்கள்.

வரலாற்றில் மனிதகுலத்தைப் பாதித்த ஒரு சில வைரஸ் கொள்ளைநோய்களே இங்குக் குறிப்பிடப் பட்டுள்ளன. இவை 20ம் நூற்றாண்டு முதல் இன்று உள்ள கொரோனா வரை உலகை அச்சுறுத்திய நோய்த்தொற்றுகளில் சில மட்டுமே. இயற்கையுடன் இணைந்து, சக உயிரினங்களையும் வாழவிட்டு, மனிதன் வாழக் கற்றுக்கொள்ளாத வரை கொள்ளை நோய்கள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

# இயக்கச் செய்திகள்

## கொரோனா நிவாரணப் பொருட்கள் வழுங்களின் மாவட்டங்களினன் பங்களிப்புகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாலூர்–இராமாபுரம், நரப்பாக்கம்,நாவலூர் – தத்தலூர் ஆகிய மூன்று கிராம இருளர் குடியிருப்பு பகுதியில் நிவாரண உதவிகள் அணுபுரம், கல்பாக்கம், திருக்கழுக்குன்றம் கிளைகள் சார்பில் 50 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் மற்றும் அரிசி ஆகின வழங்கப்பட்டது.



இந்நிகழ்வில்அணுபுரம் கிளை சார்பில் Dr.மனோ கரன், ரமேஷ் கிளை பொருளாளர், கல்பாக்கம் கிளை சார்பில் ஜெயவேலு மாவட்ட துணைத் தலைவர், திருக்கழுக்குன்றம் கிளை சார்பில் அரவிந்த் குமார் கிளைச் செயலாளர், சுந்தர் இணைச்செயலாளர், பொன்னரசன் ஆகியோருடன் மாவட்டச் செயலாளர் ஆ.குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஒசூர்** கடவுள் நகரில் ஒசூர் தாசில்தார் திரு



வெங்கடேசன் முன்னிலையில் இரண்டாம் கட்டமாக 32 குடும்பங்களுக்கும், ஜூஜூவாடியில் டெம்போ ஓட்டுநர் 15 குடும்பங்களுக்கும், ஒசூர் எழில் நகரில் இன்று 25.04.2020 இரவு 7 மணிக்கு 60 குடும்பங்களுக்கும் மளிகை பொருட்கள் வழங்கப் பட்டன.



தமுஎகச மாநில பொதுச்செயலாளர் ஆதவன் தீட்சணயா அவர்கள் நமக்களித்த தகவலின் அடிப்படையில், ஊரடங்கால் பாதிக்கப்பட்ட BSNL காண்டிராக்கட் தொழிலாளர்களுக்கு முதல் கட்டமாக 30 தொழிலாளர்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

ஒசூர் மத்திகிரி குதிரைபாளையத்தில் நிழல் அறக்கட்டளை சார்பாக 50 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

**கோவை** மாவட்டம் மேட்டுப்பாளையம் பாரதி நகர் பகுதியில் உணவுக்கு பிரச்சனையான குடும்பங் களுக்கு உணவுப்பொருள் வழங்கப்பட்டது

**மதுரை** மாவட்டத்தில் தீபம் குழுக்களுக்கு 125 குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்கள்



வழங்கப்பட்டது (உதவி: எஸ்.என். கல்லூரி பேராசிரியர்கள், ஆசிரியர்கள்) திருமங்கலம் கிளை சார்பாக 27–04–2020 சாத்தங்குடி கிராமத்தில் அன்றாடம் உணவுக்கு கஷ்டப்படும் ஏழ்மை நிலையில் உள்ள 15 குடும்பங்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டது. மேற்கண்ட பொருட்களை வாங்கி கொடுத்து உதவிய திருமிகு பிரேமலதா ஆசிரியர் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியும்

**வேலூர்** மாவட்டம திருப்பத்தூர் சார்பில் விழியிழந்த மாற்று திறனாளிகள்.25 நபர்களுக்கு சுள 6000 (5மூட்டைஅரிசி+ காய்கறிதொகுப்பும்) அரசு மருத்துவமனை பிச்சனூர் சுள 500 மதிப்புள்ள ஆயளம , ளுயவேைவயசல ¬ நவஉ மாவட்ட பொருப்பாளர் ஞ.அச்சுதன்சுவன.ழுஅ அவர்களால் வழங்கப்பட்டது.

**விழுப்புரம்** மாவட்டம், வானூர் வட்டத்தில், கிளியனூர் ஊராட்சி மன்ற துப்புரவு பணியாளர்கள் சேவையை சிறப்பாக செய்ய அவர்களுக்கு சேனிடைசர்–1, முககவசம்–2 இன்று 24.04.2020 வழங்கி அவர்களின் பணியை பாராட்டியக் காட்சி.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கிளியனூர் கிராமத்தில் அரிசி வழங்கிய காட்சி.



**நீலகிரி** மாவட்டம் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட துப்புரவு பணியாளர்கள் 40 பேருக்கும் கூடலூர் ளு ளு நகரில் 8 குடும்பங்களுக்கு தலா 1000 ரூபாய் மதிப்புள்ள மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பசுமை மீட்பு குழு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் கொடுக்கப்பட்டது.

## மாவட்டங்களில் கொரோனா நிவாரணப் பொருட்கள் வழங்கிய காட்சிகள்























சந்தோஷ் டிரேடர்ஸ்













# கடைக்காரர்களுக்கான எச்சரிக்கைக் குறைப்புகள்

முன்னுரை

கோவிட் 19 பரவலைக் குறைப்பதற்காக ஊரடங்கு நடைமுறையில் உள்ளபோதும் அத்தியாவசியப் பணிகளான மளிகைக் கடைகள், மருந்துகடைகள் போன்றவை திறந்திருக்க அனுமதிக்கப்படுகிறது.

பலரும் வந்துசெல்லும் இடங்களாக இவை இருப்பதால் கோவிட் 19 ஐ நோயை பரப்ப அதிக வாய்ப்புள்ள இடமாக இது அமைய வாய்ப்புள்ளது.. கைசுத்தம் செய்தல்,தனிநபர் இடைவெளியைப் பராமரித்தல், தளங்களை (கடையின் முன்னால் உள்ள தடுப்பு போன்றவற்றை சுத்தம் செய்தல் போன்றவற்றைக் கடைபிடிப்பதோடு ஒரு சேவைப் பணியாளராக நீங்கள் சில எச்சரிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். இது பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை நீங்கள் அளிக்கும் அதே நேரத்தில் உங்களையும் உங்களது சக தொழிலாளர்களையும், உங்களது குடும்பங்களையும் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும்.

**கடைக்காரர்களுக்கான பொதுவான வழிமுறைகள்**

கோவிட் 19 தொற்றுநோய் பரவலில் இருக்கும் போது வழக்கமாகக் கைகளைக் கழுவும் வழிமுறைகளும் முகத்தில் கைகளைக் கொண்டு செல்லாமல் இருக்கும் வழிமுறைகள் எப்படி எல்லோருக்கும் பொருந்துமோ அவையாவும் உங்களுக்கும் பொருந்தும். இந்த நடைமுறை யானது கடையிலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் பின்பற்றப்படவேண்டும். வாடிக்கையாளர்களோடு விற்பனைச் செயல்பாட்டில் ஈடுபடும்போது கண்டிப்பாக முகக் கவசம் அணியவேண்டும். .சிலர் கூடுதல் பாதுகாப்பிற்காக தொப்பிகள், கைக்கவசங்கள் செவிலியர் அணியும் தொப்பி போன்றவற்றையும் அணியலாம்..



நீங்கள் நியாயவிலைக் கடைகள் போன்றவற்றில் பணிபுரிந்து உதிரியாக பொருட்களை விற்பனை செய்பவராக இருந்தால் (அதாவது பேக்கட் செய்யப் பட்டாத பொருட்களைக் கையாள்பவராக இருந்தால் ஒரு வசதியாக வளைவுடன் கூடிய நீளமான குழாய் போன்றவற்றை வடிவமைத்துக்கொள்ளலாம். இது உங்களுக்கும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கும் போதுமான அளவு தனிமனித இடைவெளியைப் பராமரிக்க உதவும்.

**நீங்கள் உடல் நலமில்லாமல் இருந்தால்–**

நீங்களோ அல்லது தங்களுடன் பணியாற்றும் வேறு பணியாளர்களோ சளி, சுரம் போன்ற கோவிட் 19 தொற்றின் அறிகுறிகளோடு இருந்தால் நீங்களோ அவர்களோ கண்டிப்பாக விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டிலேயே தங்கிவிடவேண்டும். உண்மையில் உங்களது முதலாளியே சம்பளத்துடன் கூடிய விடுப்பினை அளிக்க வேண்டும். இது பணியாளர் விரைவில் நலமடைய உதவுவதோடு தம்முடன் பணியாற்றும் பணியாளர்களுக்கோ அல்லது வாடிக்கையாளர்களுக்கோ பரவாமல் தடுக்க உதவும்.

**தனிநபர் மற்றும் வீட்டு சுகாதாரம்**

வீட்டிற்குத் திரும்பியவுடன் சோப்பு போட்டுக் குளித்துவிடவேண்டும். இது ஏதாவது வைரஸ் உங்கள் கைகளிலோ அல்லது உடலிலொ தொற்றியிருந்தால் அவை உங்களது குடும்பத்தினருக்குக் கடத்தப்படாதிருக்க உதவும். தாங்கள் அணிந்திருந்த உடைகளை தனியாக ஒரு பக்கெட்டில் போட்டுவைக்கவும். வாய்ப்பிருந்தால் உடனடியாக சோப்புப் போட்டுத் துவைத்துவிடவும். .

சரக்குகளை வாங்குவதும் பல்வேறு இடங் களுக்கு சேர்ப்பிப்பதும்.

பொதுவெளியில் இயங்கும்போது அனைவரும் அரசால் பரிந்துரைக்கப்படும் தனிமனித இடை வெளியினைப் பின்பற்றவேண்டும். மொத்தவிற்பனை சந்தைகளிலிருந்து அவர்கள் பொருட்களை பெறும்போதும் தனிமனித இடைவெளி அமையும் வரிசை முறை இருக்கவேண்டும். ஒவ்வொரு முறை நாம் வெளியில் இருக்கும்போதும் முகக்கவசம் அணிதல் அவசியம். அதுபோலவே வெளியே சென்று வந்தபின்பு கைகளை சோப்பு போட்டு உரிய முறையில் கழுவவேண்டும். எவ்வளவு இயலுமா அவ்வளவு கூடுமானவரை பணப்பரிவர்த்தனைகளை இணையம் மூலம் செய்யலாம்..

நீங்கள் சரக்குகளைப் பெறும்போது சரக்கு களானது கடையின் வெளிப்பகுதியில் பெறப்படுதல் நல்லது.அங்கேயே வைத்து சரக்குகளைப் பிரித்து சிறு சிறு அலகுகளை கடைக்குள் கொண்டுவரலாம். சரக்கு வந்துள்ள பெட்டியை நல்ல முறையில் எவ்வளவு இயலுமோ அவ்வளவு சிறிய துணியில் சோப்புத் தண்ணீரைக்கொண்டு துடைத்துவிடுதலும் நல்லது. குறிப்பாக எந்த வழியாக சிறு சிறு பாக்கெட்டுகள் வருமோ அந்த இடத்தையாவது சுத்தம் செய்தல்நலம்.

**சரக்குகளை வைத்திருத்தல்**

ஏற்கனவே பாக்கெட்டுகளில் அடைக்கப்படாத நாம் உதிரியாக விற்பனை செய்யும். அரிசி,பருப்பு போன்றவற்றை ஒரு மூடிய கொள்கலனில் வைத்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாள் இறுதியிலும் சோப்புத் தண்ணீரில் நனைக்கப்பட்ட துணி கொண்டு கொள்கலனை சுத்தம் செய்தல் நல்லது. பாக்கெட் செய்யப்பட்ட பாட்டில்கள், பெட்டிகள் போன்றவற்றை அடுக்கறைகளில் (ஷெப்ஃப்) வைக்கலாம். இவை ஏற்கனவே பெரிய பெட்டிகளிலிருந்து வந்து நாம் சுத்தமாகக்கைகளைக் கழுவிக்கொண்டு அடுக்கியவைதான் எனவே இதில் வைரஸ் தொற்று இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவே பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற விரைவில் பயன்பாட்டுக்குள்ளாகிவிடும் பொருட் களையும் குறைந்த கால அளவில் அதற்கான அறைகளில் வைக்கலாம். அதே நேரத்தில் மக்கள் வீட்டுக்குச் சென்ற பிறகு பழங்களையும் காய்கறிகளையும் அதுபோலவே பேக் செய்யப்பட்ட பொருட்களின் வெளிப்புற பாகம் போன்றவற்றை சுத்தமாகக் கழுவியபிறகே பயன்படுத்தவேண்டும். . அது போலவே வாடிக்கையாளர்களிடம் அவர்களுக்கு எது தேவையோ அதனை மட்டும் தொடுமாறு வற்புறுத்தலாம். இது வைரஸ் தொற்றின் வாய்ப்பைக் குறைக்க உதவும்.

**பொருட்களை விற்பனை செய்தல்**

அனைவரும் வெளியே செல்லும்போது திரும்பத் திரும்ப சுத்தப்படுத்தி பயன்படுத்தும் வகையிலான ஒரு அடுக்குகொண்ட முகக்கவசத்தினையோ அல்லது முகமூடியையோ அணிதல் அவசியம். அதுபோலவே கடைக்காரர்களும் வாடிக்கையாளர் களோடு தன்மையாக இருக்கும் அதேநேரத்த்தில் முகக்கவசம் அல்லது முகமூடி அணிந்து வருவதையும் உறுதி செய்தல் வேண்டும். . எங்களது இணையதளத்திலிருந்து அதற்கான போஸ்டர்களை நீங்கள் தரவிரக்கம் செய்து அதனை கடைகளில் வாயில்களில் ஒட்டி வைக்கலாம் இதன் முலம் ஏன் அவர்கள் முகக்கவசம் அணியவேண்டும் என்பதை புரிந்துகொள்வர்..

உங்கள் கடையில் அளவைப் பொறுத்து நீங்கள் பின்வரும் வாய்ப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்யலாம்.

**தெரிவு 1: (சிறிய அளவிலான கடைகளுக்கு)**

நீங்கள் கடையின் வாயிற்புறத்திற்கு அருகிலேயே இருந்து தேவையான பொருட்களை அளிக்கலாம். தங்கள் வாடிக்கையாளர்களை தேவைப்பட்டியலொடு வரச்சொல்வதன் மூலம்நீங்கள் விரைவாகவும் நேர்த்தியாகவும் அவர்களுக்கு சேவைசெய்ய இயலும்..

**தெரிவு 2: (பெரிய அளவிலான உட்பக்கம் வந்து பொருட்கள் வாங்கும் கடைகள்)**

தங்கள் கடைக்குள் வரும் அனைத்து நபர்களையும் வாயிலிலேயே கைகளை கழுவிக் கொள்ள வலியுறுத்துங்கள்.

அவர்கள் கைகளை கழுவிக்கொள்வதற்கு வசதியாக அலும்புமிடம், தண்ணீர், சோப்பு உள்ளிட்டவற்றுக்கான ஏற்பாடுகளை Have a washbasin with soap at the entrance, வாய்ப்பிருந்தால், அவர்கள் கைகளைத் துடைத்துக் கொள்ள துடைப்பு காகிதங்களையும் தந்துதவுங்கள் இந்த துடைப்பு காகிதங்களையும் சேகரிக்க தனியாக குப்பைக் கூடையைப் பராமரித்து பாதுகாப்பாக அப்புறப்படுத்தவும். இவ்வாறு இல்லாத பட்சத்தில் மாற்று ஏற்பாடாக ஆல்கஹால் அடங்கியுள்ள கைகளை சுத்தம் செய்யும் கிருமிநாசினி (60 சதவிகிதம் ஆல்கஹால் அடங்கியது) வாயிற்புறத்தில் வைத்து பயன்படுத்தச் செய்யலாம். வாய்ப்பிருக்கும் படசத்தில் நுழையும் மற்றும் வெளியே செல்லும் கதவுகளைத் திறந்து வைக்கலாம். இதன் மூலமாக கதவுகளின் கைப்பிடிகளையோ தாழ்ப்பாள்களையோ தொட்டுத் திறக்கவேண்டிய அவசியம் வாடிக்கை யாளர்களுக்கு இருக்காது. மூலம் தொற்றுப் பரவுவதை தடுக்க இயலும்.அனைத்து சன்னல் களையும் திறந்துவைப்பதன் மூலம் காற்றோட்டமாக இருக்கவும் செய்யலாம்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கடைக்குள் பொருட்கள் வாங்க இருக்கவேண்டிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையினை நீங்கள் கட்டுப்படுத்தலாம். ஒன்று அல்லது இரண்டு மீட்டர் தனிநபர் இடை வெளியில் எவ்வளவு நபர்கள் கடைக்குள் இருக்கும் அளவுக்கு உங்கள் கடைகள் இருக்கிறது என்பதை வைத்து இந்த எண்ணிக்கையை நீங்கள் முடிவு செய்துகொள்ளலாம்.

**தெரிவு 3 (கடைக்கு வெளியே மற்றும் மொத்த விற்பனைசந்தைகளில்)**

கடைக்கு வெளியே மற்றும் மொத்த விற்பனை யகங்களில் சிறிதளவிலான பரப்புடனேயே செயல்பட வேண்டிவரும். (அதாவது வைரஸ் தங்கி அடுத்தோர்க்கு கடத்தும் வாய்ப்பு) ஆனால் இது போன்ற இடங்களிலும் கடைகளிலும் தங்களைச் சுற்றி அடுத்தநபர்களிடமிருந்து 1 அல்லது 2 அடி தள்ளி நிற்கவேண்டும். பொதுவாகவே உங்களைச் சுற்றிலும் எந்தவிதமான கழிவுகளும் இல்லா திருக்கும் சுகாதாரத்தை உறுதிசெய்துகொள்வது நல்லது. ஒவ்வொரு நாள்முடிவிலும் எல்லா குப்பைகளையும் சரியான முறையில் அதற்கே உரிய கொள்கலன்களில் சேகரித்து சரியான வகையில் இடங்களில் அப்புறப்படுத்தவேண்டும்.

வரிசைகள்

ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் சேவை செய்வதில் சில நேரம் சிறிது நேரம் காத்திருக்க நேரலாம். இதுபோன்ற நேரங்களில் அவர்கள் வரிசையில் நிற்கும்போது 1 அல்லது 2 மீட்டர் தனிமனித இடைவெளி விட்டு நிற்கக்கூறவேண்டும். இதற்காக 1 அல்லது 2 மீட்டர் இடைவெளியில் சில வளையங்களை வரைந்து அதில் நிற்கவைக்கவும் செய்யலாம். .

ஒவ்வொரு நாள் முடிவிலும் சோப்புத் தண்ணீர் கொண்டு அனைத்து கவுண்டர்களையும் இன்ன பிறபரப்புகளையும் கைப்பிடிகள், மூடிகள், பணப்பெட்டி போன்றவற்றையும் சுத்தம் செய்யவேண்டும். இது போலவே அடிக்கடி நாம் பயன்படுத்தும் குழாய், கதவுப் பிடிகள், கதவுத்தாழ்ப்பாட்கள், கழிவறையில் பிள்ஷ் செய்யும் பொத்தான்கள் போன்றவற்றையும் சோப்புத் தண்ணீர்கொண்டு சுத்தம் செய்ய மறவாதீர். கைகழுவும் வாஷ்பேசின் கழிவறைகளையும் அதன் அங்கமானவற்றையும் சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்யவேண்டும்.. , அதனைத் துடைக்கவும் வேண்டும். 1 சதவிகித பிளீச் செய்து நாளின் சில முறை கிருமி நீக்கம் செய்யவேண்டும்.

மீண்டும் மீண்டும் தூய்மைப்படுத்தி பயன்படுத்த வாய்ப்புள்ள தொப்பிகள்,முக்கவசங்கள் மற்றும் ஏப்ரன்களை உபயோகிக்கவும் இவ்வகையான பொருட்களையும் மற்ற துணிகளோடு அல்லாமல் தனியாக சோப்புத்தூளை பயன்படுத்தித் துவைக்க வேண்டும். அனைத்துப் பணியாளர்களுக்கும் தனித் தனியாக தூய்மையானதாக வழங்குவதை உறுதி செய்யவேண்டும். அதுபோலவே ஒரு முறையே பயன்படுத்தித் தூக்கி எறியும் முகக்கவசங்கள், தொப்பிகள், ஆப்ரான்கள் போன்றவை பயன்படுத்தி சரியான முறையில் அப்புறப்படுத்தப்படுவதையும் உறுதிசெய்தல் வேண்டும். . அவற்றை வீடுகளில் பயன்படுத்தப்படும் 1 சதவிகித பிளீச் (1:10) மூலம் கிருமிநீக்கம் செய்யப்பட்டு புதைக்கவோ அல்லது எரிக்கவோ வேண்டும்.

**பணம் பெறுதல் மற்றும் திரும்ப அளித்தல்**

நீங்கள் கணிசமான அளவில் ரூபாய் நோட்டுக்களையும் நாணயங்களையும் கையாள் வதால் இவற்றின் மூலமாக வைரஸ் தொற்று ஏற்படாமலிருப்பதை நீங்கள் சிறப்பான எச்சரிக்கைகளை உறுதிசெய்யவேண்டும்.

எவ்வளவு இயலுமோ அவ்வளவு அடிக்கடி நீங்கள் உங்கள் கைகளை சோப்பு போட்டு கைகளை கழுவிக் கொண்டேயிருங்கள். பணத்தைக் கையாளும்போது நீங்கள் கையுறைகளை அணிந்துகொள்ளலாம். ஆனால் அதே நேரம் நீங்கள் வேறு எந்த பரப்பையோ பொருளையோ தொடாமல் கவனமாயிருப்பதும் அவசியம் பணப்பெட்டியைத் தனியாக வைத்து ஒவ்வொரு நாள் இறுதியிலும் அப்பெட்டியினை சோப்புத் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். முடிந்தால் பணப்பரிமாற்றப் பொறுப்பை தனியாக ஒருவரிடம் ஒப்படைத்துவிடலாம். ஆனால் அதே நேரம் அவர் கடையின் எந்த இடத்தையும் பொருளையும் தொடாமல் இருப்பதையும் உறுதி செய்யவேண்டும். எவ்வளவு இயலுமோ அவ்வளவு இணையவழிப் பரிமாற்றத்தை ஊக்குவியுங்கள்.

**வீட்டுக்கு சென்று சரக்களித்தல்**

ஒரு பெட்டியிலோ அல்லது சரக்குகள் வைக்கப்பட்டு அதனை வீட்டுக்கு வெளியே வைக்கப்பட வேண்டும். வாடிக்கையாளர் அதனை எடுத்துச்செல்லவேண்டும்.வாய்ப்பிருப்பின் சரக்குகளை ஒப்படைப்பு செய்யப்படும் வீட்டுக்குள் நுழையாமல் கூட இருக்கலாம். பணங்களையும் நாணயங்களையும் வைத்துக்கொண்டு பராமரிக்க ஒரு பெட்டியோ அல்லது தனி ப்பையோ வைத்துக் கொள்ளலாம். ஏனென்றால் பணத்தைக் கையாளப் போகிறீர்கள். பிறகு கைகளை சுத்தப்படுத்திக் கொள்ளலாம்.

**கடைக்காரர்களுக்கான பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள்.**

எவ்வளவு அடிக்கடி முடியுமோ அவ்வளவு அடிக்கடி கைகளை கழுவுங்கள்.

ஒருபோதும் உங்கள் முகத்தைத் தொடமுயலாதீர்

முகக்கவசம் அணியுங்கள்.

சோப்புத் தண்ணீர் மற்றும் வீடுகளில் பயன்படுத்தப்படும் பீளிச் 1:10 போன்றவற்றைக் கொண்டு அனைத்துக் கவுண்டர்களையும், கடையின் இதரப் பரப்புகளையும் சுத்தம் செய்யுங்கள்

மீண்டும் மீண்டும் சுத்தமாகத் துவைத்துப் பயன்படுத்தப்படும் தொப்பிகள், முக்ககவசங்கள் மற்றும் ஆப்ரான்களை பயன்படுத்துங்கள் . ஆனால் இதனைத் துவைக்கும்போது மற்ற துணிகளோடு துவைக்காமல் தனியாகத் துவைக்கவேண்டும்.

நீங்கள் உடல் நலமில்லாமல் இருந்தால் பணி புரியாதீர்கள்

வீட்டுக்குச் சென்றவுடன் சோப்பு போட்டுக் குளியுங்கள்.

நீங்கள் பணிபுரியும்போது பயனபடுத்தும் துணிகளைத் தனியாகத் துவையுங்கள்

சரக்குகளை வாங்குவதும் வீடுகளுக்குச் சென்று சரக்களித்தலும்

கூடுமானவரை கடையின் வெளிப்புறத்தில் வைத்து சரக்குகளை வாங்குங்கள்

பெட்டிகளை சோப்புத் தண்ணீர் கொண்டு துடைத்தெடுங்கள்.

கடைக்கு வெளியேயே வைத்து சிறு பாக்கெட்டுகளையும் பெட்டிகளையும் பிரித்தெடுங்கள்

பின்னர் அவற்றைக் கடைக்குள் கொண்டுவாருங்கள்.

சரக்குகளை வைத்திருத்தல்

பேக் செய்யாமல் விற்கப்படும் பொருட்களான அரிசி, பருப்பு போன்றவற்றை மூடியுடன்கூடிய கொள்கலனில் வைத்திருங்கள்.

ஒவ்வொரு நாள் முடிவிலும் இதனை சோப்புத் துணியால் அவசியம் துடைத்து சுத்தம் செய்யவும்.

பழுங்கள் காய்கறிகளை பரவலாகத் தெரியும்படியே காட்சிப்படுத்தலாம்.

**பொருட்களை விற்பனை செய்தல்**

உங்கள் கடை சிறிதானதாக இருந்தால். கடையின் வாயிலில் வைத்தே விற்பனை செய்து வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யுங்கள்.

பெரிய கடையாக இருக்கும் பட்சத்தில் கடைக்கு வரும் அனைத்து வாடிக்கையாளர்களையும் உள்ளே வரும்முன்னர் கைகளைசுத்தம் செய்துகொள்ளச் சொல்லுங்கள். மேலும் ஒரு நேரத்தில் கடைக்குள் இருக்கும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை

யையும் கட்டுப்படுத்துங்கள்

வெளிப்புறச் சந்தை மற்றும் மொத்த விற்பனைக் கடைகளில் 1 அல்லது 2 மீட்டர் இடைவெளியில் வாடிக்கையாளர்கள் வரிசையில் நிற்பதை உறுதி செய்யுங்கள்.

1 அல்லது 2 மீட்டர் இடைவெளியில் நின்று பொருட்களை வாங்குவதற்கு வசதியாக வட்டங்களை வரையுங்கள்.

பணம் செலுத்துதல்

பணத்தையும் நாணயங்களையும் ஒரு தனி பெட்டியில் வைத்து நாள்தோறும்

அப்பெட்டியை சோப்பு நீர் கொண்டு சுத்தம் செய்யுங்கள்..

பணத்தைக் கையாண்ட பிறகு சோப்பு கொண்டு கைகளை சுத்தம் செய்துகொள்ளுங்கள்

வாய்ப்பிருக்கும் பட்சத்தில் ஒரு தனிநபரை பணப்பரிமாற்றத்திற்காக ஒதுக்குங்கள். கூடுமான வரை இணைய வழிப்பணப்பரிவர்த்தனையை மேற்கொள்ளுங்கள்

வீடுகளுக்கு சரக்குகளை கொண்டுசேர்க்கும் முறை

வாடிக்கையாளரின் வீட்டுக்குள் நுழைய வேண்டாம். வீட்டின் வெளிப்புறத்திலேயே சரக்குகளை வைத்துவிடுங்கள்.

பணத்தை தனிபெட்டி அல்லது பையில் வாங்கிவையுங்கள். அதனை பொருட்களோடு வைத்து பின்னர் கைகளை சுத்தம் செய்து கொள்ளுங்கள். அப்பெட்டியையும், பையையும் நாள்தோறும் சோப்பு நீர் கொண்டு சுத்தம் செய்யுங்கள்

பணத்தைக் கையாண்ட பிற்கு கைகளை சோப்புகொண்டு சுத்தம் செய்ய மறக்கவேண்டாம்.

**கோவிட் 19 பணியில் இந்திய விஞ்ஞானிகள் தயாரிப்பு**

**தமிழில்: என்.மாதவன்,**

**தமிழ்நாடு அறிவியல் இயக்கம்**









RNI No. TNTAM/2000/4483 Regd.No.TN/MA/81/2018-20. TN/WPP/10/SR/2018-20
Date of Publication 27th. Posted at Madurai BPC. 28th &29th

கொரோனா
பரவாமல் தடுப்போம்

Break the chain



## தனித்திருந்தும், ஒற்றுமையாயிருந்தும் அப்புறப்படுத்தப்பட வேண்டியவைகள்...

வழங்கப்படவில்லை எனில் திரும்ப அனுப்ப வேண்டிய முகவரி
அனுப்புநர்:
**விஞ்ஞானச் சிறகு**
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்
6, காக்கா தோப்புத் தெரு
**மதுரை** – 625 001. செல் : 99440 52435
mail to : editorsiragu@gmail.com

பெறுநர்: